1-9-1991

# சபாநாயகரை கொல்ல முயற்சி, எம். பிக்களுக்கு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

…லர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 16 இதழ்: 202
…ழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 1-9-1991

## கொலைப்பயமுறுத்தல்

(கொழும்பு)
கொழும்பில் சபாநாயகர் எம்.எச்.மொகமட்டை கொல்வதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டபிரே
(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் சுவரொட்டிப் போர்

(கொழும்பு)
கொழும்பு நகர் உட்பட புறநகர் பகுதிகள் எங்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு ஆதரவாகவும், எதிரணியினருக்கு ஆதரவாகவும் சுவரொட்டிப் போர்கள் தொடங்கியுள்
(4-ம் பக்கம் பார்க்க)

## வழமையான கடமைகளில் ஜனாதிபதி பிரேமதாஸா

(கொழும்பு)
ஜனாதிபதி திரு.பிரேமதாசா வழமைபோல் தமது கடமைகளில் ஈடுபட்டுவருவதாக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.
ஜனாதிபதிக்கு எதிராக
[4-ம் பக்கம் பார்க்க]

# "நிபந்தனையற்ற முறையில் பேச்சுக்கள் உலக அரங்கில் …டப்பதையே விரும்புகிறோம்"

## …லைவர் பிரபாகரன் பேட்டி

[கா. யோகநாதன், தேவா]

…லை நாடுகளின் மத்தியில் உலக அரங்கில் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம். அப்பொழுதுதான் பேச்சுவார்த்தைக்கு பெறுமதி ஏற்படும். சர்வதேச ரீதியாக கவனம் செலுத்தப்படும்.

…வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

…ப்பேட்டியின் போது பிர… தலைவர் திரு மாத்…யா, அரசியல் ஆலோசகர் …. அன்ரன் பாலசிங்கம், …பலாளர் நாயகம் யோகி …பாலரத்தினம்) ஆகியோரும் …னிருந்தனர்.

தலைவர் பிரபாகரன் இப்…ட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு என்றும் தயாராக இருக்கிறோம்.

பேச்சுவார்த்தைக்குத் தனிப்பட்ட இந்தியாவின் மத்தியஸ்தத்தை நாங்கள் விரும்பவில்லை. அப்படியொரு மத்தியஸ்தம் ஏற்பட்டாலும் அது சுதந்திரமாக இருக்கவேண்டுமென்பதில் நாங்கள் கவனமாக இருக்கிறோம்.
[3-ம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியின் செயல் சட்டவிரோதமானது

(கொழும்பு)
ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவுக்கு எதிராக ஆளும்கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஜனாதிபதி நிறுத்திவைத்தது, சட்ட விரோத
(4ம் பக்கம் பார்க்க)

## எதிரான உறுப்பினருடன் பேச்சு நடத்த தயார்

(கொழும்பு)
தனக்கு எதிராக அவதூறு மனுவில் கையெழுத்திட்ட ஐ.தே. கட்சி எம். பிக்களுடன் பேச தாம் தயாராயிருப்பதாகவும் ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.
இந்த மனுவால் ஜனாதிபதி உடல் உள ரீதியில் பெரிதும்
(4ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியிலிருந்து ஸ்ரான்லி இடைநிறுத்தம்

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான மனுவில் கையெழுத்திடாததற்காக சுதந்திரக்கட்சி உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான திரு. ஸ்ரான்லி திலகரட்னவை கட்சி இடைநிறுத்தம் செய்துள்ளது
இதுகுறித்து திரு. திலகரதன சட்ட ரீதியான விளக்கமொன்றை கட்சித் தலைமைப் பீடத்திற்கு அளித்துள்ளார். எனினும் இவரது விளக்கத்தை மேலிடம் ஏற்றுக்கொள்ளவில்லை.
இவரது இடைநிறுத்தம் குறித்து கட்சி, பாராளுமன்ற செயலகத்திற்கு அறிவித்துள்ளது. [சி]

## தென்பகுதியில் அரசு வன்முறையை தூண்டும்

### - லலித் குற்றச்சாட்டு.

(கொழும்பு)
தென்பகுதியில் பெரும் கலவரம் தோன்றக்கூடிய நிலை உருவாகி வருவதாகவும், அரசு வன்முறைகளை தூண்டும் சாத்தியம் உள்ளதாகவும், 4 குழுக்களை உடைய குண்டர் படைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தமது உயிருக்கு எவ்வேளையிலும் ஆபத்து ஏற்படலாமெனத் தாம் அஞ்சுவதாகவும் திரு. லலித் அத்துலத் முதலி பி.பி. ஸி.க்கு தெரிவித்துள்ளார்.
மேலும் அவர் தெரிவிக்கையில்; தமக்கு வழங்கப்பட்ட
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்க மறுப்பு

(கொழும்பு)
வெளிநாட்டு பத்திரிகையாளருடன் பேசுவதற்கு ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு ஆதர
[4-ம் பக்கம் பார்க்க]

## தொழில் ராஜாங்க அமைச்சர் ராஜினமா

(கொழும்பு)
தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. லஷ்மன் செனவிரத்ன தனது ராஜாங்க அமைச்சர் பதவியை ராஜினமா செய்துள்ளார். அரசியல் கருத்து வேறுபாடு காரணமாக பதவியை ராஜினமா செய்வதாக இவர் தெரிவித்துள்ளார். [மா]

## 'பிரேமா' பதவி விலககோரி ஆர்ப்பாட்டம் நடைபெறும்?

[லண்டன்]
இலங்கை ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவைப் பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடாத்த எதிர்க்கட்சிகள் முனையலாமென வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
பாராளுமன்றத்தை ஒரு மாதகாலத்துக்கு ஒத்திவைத்துத் தனக்கு எதிராக மனுவில் கையெழுத்திட்டவர்களைப்
[4-ம் பக்கம் பார்க்க]

## ஆவணங்கள் எடுக்கப்பட்டன

(கொழும்பு)
தமது அலுவலகங்களில் இருந்து ஆளும் கட்சியைச் சேர்ந்த இரு முக்கியஸ்தர்கள் முக்கிய ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இவ்வாறான செயற்பாடுகள் அதிகரிக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஜனாதிபதிக்கு எதிரான மனுவிற்கு 141 எம்.பி.க்கள் ஆதரவு

[கொழும்பு]
ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவிற்கு தற்போது 141 எம். பி.க்கள் ஆதரவாயுள்ளதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
இதற்கிடையில் இந்த மனு தொடர்பாக சுதந்திரக்கட்சிக்குள்ளும் சில கருத்து முரண்
[4ம் பக்கம் பார்க்க]

## இலங்கை அரசியல் குறித்து இந்தியா அவதானிப்பு

[புதுடில்லி]
இலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள் குறித்து இந்தியா அவதானித்து வருவதாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்:
(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## மணப்பெண் தேவை

யாழ். இந்து 38 வயது டொக்டருக்கும் 36 வயது B Sc சிவில் எஞ்சினியருக்கும் 34 வயது எக்கவுண்டனுக்கும் 32 வயது B Sc. ஆசிரியருக்கும் குற்றமுள்ள 40 வயது வியாபாரிக்கும் மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம். (சி-5239]

## மணமகன் தேவை

யாழ். இந்து 34 வயது டென்ரல் டொக்டருக்கும் 33 வயது எஞ்சினியருக்கும், 32 வயது எக்கவுண்டனுக்கும், 30 வயது B. Sc ஆசிரியைக்கும், செவ்வாய்க் குற்றமுள்ள 28 வயது A/L ஆசிரியைக்கும் மணமகன் தேவை, மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். (சி-5238]

## உலோக வேலை

கோவில் மணி வேலைகளும், சிலைகளும், அதற்குரிய இரும்பு வேலைகளும் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு: 48, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் [சி-5216]

## புதிய மீரா நாவல்

பரிசளிக்கக்கூடியவை இன விடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரவ், அக்கினி, முள்முடி மன்னர்கள், இன்னும் உயிரோட்டமான பத்து "மீரா நாவல்கள்" விற்பனையாகின்றன. விரைவில் "ஊருக்கல்ல..." (சி-5236)

## O/L கல்வி 90, 91

விசேட பெறுபேறுகள் அடைவதற்கு தனிப்பட்ட கவனிப்புடன் ஆங்கிலம், கணிதம் பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, சிவன்கோவிலடி திருநெல்வேலி. (சி-5231)

## வாங்க / விற்கப்படும்

பழையபுத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகை, போத்தல் வகைகள், உர, கோழித்தீன், சீமெந்து உறைகள், வெற்றுத் தகரங்கள் வாங்கப்படும். விற்கப்படும். சோ. சேனுதிராசா, முகாமையாளர், இராமநாதன் பழைய புத்தகசாலை, 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-5168)

## சிவராசனின் சாரதி கைது

(சென்னை)

ஒற்றைக் கண் சிவராசனின் காரச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது. (சி)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் குமரையா வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் அரைஇறுதி ஆட்டம் நாளை சென் அன்ரனிஸ் கழகத்துக்கும் சென்.மேரிஸ் கழகத்துக்குமிடையில் பாஷையூரில் நடைபெறும். (வி)

## புதிய வகுப்புகள்

Computer – Basic Shorthand & typing Spoken English வகுப்புகள் முறையே 28-8-91, 1-9-91, 4-9-91 திகதிகளில் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு School of Business Administration, 16, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-5208)

# வெலிக்கடை சிறையில் வடபகுதி இளைஞர்கள்

[கொழும்பு]

வெலிக்கடைச் சிறையில் கடந்த மூன்று வருடங்களாக விசாரணை எதுவுமின்றிவாடும் வடபகுதித் தமிழர்களில் ஐவர் தமது விபரங்களை பெற்றோருக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ளனர்.

மேற்படி ஐவரின் விபரம் வருமாறு; சின்னத்தம்பி தவராஜா [பளை], கதிர்காமர் இராசரட்ணம் [நல்லூர்], யோகரட்ணம் [ஊர்காவற்றுறை], விக்கேஸ்வரன் மோகனதாஸ் (நீர்வேலி), கந்தையா சண்முகநாதன் (தெல்லிப்பழை). (சி)

யாழ். மாவட்டத்தில்

# ராணுவ நடவடிக்கையினால் 1200 மக்கள் பலி!

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஜூன் மாதம் தொடக்கம் இவ்வருடம் ஜூலை மாதம் இறுதி வரை இராணுவ நடவடிக்கைகளினால் யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 1,200 பேர் கொல்லப்பட்டுள்ளதாக யாழ். செயலக மதிப்பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்புக்கான நஷ்டஈடு கோரி, 1,200 விண்ணப்பங்கள் யாழ்; செயலகத்தில் உள்ள புனர்வாழ்வுப் பகுதிக்குக் கிடைத்துள்ளபோதிலும், இக்காலகட்டத்தில் இறந்தோர் தொகை அதிகமாக இருக்குமென யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வி)

# வீடமைப்புக் கடன் தொடர்பான நடவடிக்கை

[மானிப்பாய்]

யாழ்ப்பாணம் வீடமைப்புத் திணைக்களத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த வீடமைப்புக் கடன் சம்பந்தமான நடவடிக்கைகளும் இன்று முதல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளரால் செயற்படுத்தப்படவுள்ளது.

எனவே மேற்சொல்லப்பட்ட கடனைப் பெற்றவர்கள் சுண்டுக்குளி காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் இயங்கிவரும் தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (71)

## வீர வணக்கம்

[யாழ்ப்பாணம்]

மணலாற்றுப் பகுதியில் கடந்தமாதம்29-ம்திகதிநடந்த விபத்துச் சம்பவம் ஒன்றில் அஜந்தன் (மதியாபரணம் தவகாந்தன், பூமகள் வீதி, அரியாலை] விபத்து மரணமானார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பிரேமா விவகாரம் வெளிநாட்டு பத்திரிகைகளில்

[லண்டன்]

பிரிட்டனிலும் இந்தியாவிலும் வெளிவந்த பிரபல பத்திரிகைகள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக நாடாளுமன்ற எம். பிக்களின் கவிழ்ப்பு முயற்சிகுறித்து முக்கிய செய்திகளை நேற்று முன்பக்கத்தில் வெளியிட்டுள்ளன. (சி)

யாழ்.செயலக

## ஊழியருக்கு மண்ணெண்ணை

[மானிப்பாய்]

யாழ்.செயலக நலன் புரிச் சங்கத்தினர் அங்கத்தவராய் இருக்கும் செயலக ஊழியர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியர்களுக்கும் நான்கு லீற்றர் மண்ணெண்ணை வீதம் வழங்கினர் (71)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# மகாபொல கொடுப்பனவு

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

**9ம், 10ம் தவணைப் பணங்கள்**

**முதலாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | | |
| கலைப் பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | 02-09-1991 | 9-00 — 12-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 03-09-1991 | 1-30 — 3-00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 04-09-1991 | 9-00 — 12-00 |
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | | |

**10ம் தவணைப் பணம்**

**இரண்டாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | | |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | 02-09-1991 | 1-30 — 3-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 03-09-1991 | 9-00 — 12-00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 04-09-1991 | 1-30 — 3-00 |
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | | |

**10ம் தவணைப் பணம்**

**மூன்றும் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| கலைப் பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | 05-09-1991 | 9-00 — 12-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 06-09-1991 | 1-30 — 3-00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 09-09-1991 | 9-00 — 12-00 |
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | | |

**10ம் தவணைப் பணம்**

**நாலாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் 4ம், 5ம் வருடங்கள் | | |
| கலைப் பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | 05-09-1991 | 1-30 — 3-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 06-09-1991 | 9-00 — 12-00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 09-09-1991 | 1-30 — 3-00 |
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | | |

**8ம், 9ம் தவணைப் பணங்கள் விவசாய பீட மாணவர்கள்** — இவர்களுக்கான கொடுப்பனவு விவசாயபீடத்தில் வைத்து வழங்கப்படும்.

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை:

01. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை.
02. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

பதிவாளர்.

(ஏ 1545)

# கம்பியூட்டர் கல்வி

★ DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE
★ d BASE III +, LOTUS 1-2-3, WORD PROCESSING
★ MS-DOS
★ Advanced Programming in BASIC and d BASE III+

ஆரம்பம்:

31-08-91 10-00 a. m.
02-09-91 10-00 a.m.

மேலதிக விபரங்கட்கு:

**UNIKCO COMPUTER CENTRE**

37, Clock Tower Road, Jaffna.

(வெலிங்டன் சந்திக்கு வடக்கு பக்கமாக உள்ள மேல்மாடி)

(ஏ 1544)

# நிபந்தனையற்ற முறையில்

## ஒரு வருடப் போரில் கூடிய பிரதேசத்தை போராடிப் பெற்றுள்ளோம்

தலைவர் பிரபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கே: தெற்கில் ஏற்படும் மாற்றங்கள் இன விடுதலைப் போராட்ட அளவில் அதனை எவ்விதம் கணிக்கிறீர்கள்?

பதில்: தெற்கில் வரும் மாற்றங்கள் எங்கள் போராட்டத்தை பொறுத்தவரை பெரிய மாற்றங்களை விளைவிக்குமோ என்பதில் எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஆனால் தெற்கில்வரும் மாற்றங்களால் எங்கள் மக்கள்மீது இருக்கின்ற பொருளாதாரத்தடை போன்ற பெரிய அழுத்தங்கள் சிறிது குறைந்து ஒருவேளை கொஞ்சம் மக்கள் மூச்சுவிடக் கூடியதாக இருக்கலாம்.

ஏனென்றால் இந்த மாற்றத்தால் ஒரு அரசியல் மாற்றம் வந்து வரும்பொழுது அவர்கள் நிலையில் ஒருமாற்றம் ஏற்படலாம் அதனால் மக்களுக்கு கொஞ்ச ஓய்வு இருக்கலாம். ஆனால் கொள்கை ரீதியில் அவர்கள் எவ்வளவு தூரம் மாறுவார்கள் என்று சொல்ல முடியாது ஏனென்றால் இது அவர்களுடைய உட்கட்சிப் போராட்டம். அதே அத்துலத்முதலி தான் முன்பு உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். அதனால் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்று உடனடியாகச் சொல்லமுடியாது.

கே: பிரேமா அரசு கவிழ்ந்தால் அதனை வரவேற்பீர்களா?

ப. எங்களைப் பொறுத்தவரை அங்கு யாருடைய அரசு இருப்பதைப் பற்றியும் நாங்கள் கவலைப்படவில்லை.

கே: அமைச்சர் தொண்டமான் பேச்சுக்கு வருவதாக வெளிவந்த செய்திகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்;

ப. தொண்டமானின் முயற்சிகளுக்கு ஆதரவாக நாம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தோம் இனி அவர் வந்து தமது முயற்சிகளைத் தொடரலாம்.

கே: இலங்கை அரசு புதிய ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறதே?

ப; எல்லா ஆயுதங்களும் ஒரே மாதிரியான பலனையே கொடுக்கும். புதிய ஆயுதங்களைப் பொறுத்தவரையில் அது பெரியதொரு மாற்றத்தைக் கொண்டு வருமென நினைக்கவில்லை. பொதுமக்களையும், சொத்துக்களையும் அழிக்கக் கூடிய ஆயுதங்களாக இருக்கும். எமது போராட்டத்தை அழிக்கக்கூடிய ஆயுதங்களாக நாம் இதனைக் கருதவில்லை. எம் மத்தியில் இருக்கும் இனத் துரோகிகளுக்கும், காட்டிக்கொடுப்பவர்களுக்கும் எதிராகப் பொதுமக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.


கே: போரினால் ஏற்பட்ட பெறுபேறுகள் சம்பந்தமாக என்ன கூறுகிறீர்கள்?

ப: கூடிய பிரதேசங்களில் போராடி வெற்றிகண்டுள்ளோம். கொக்காவில், மாங்குளம், யாழ். கோட்டை ஆகியவற்றை வெற்றி பெற்றுள்ளோம் வன்னியைப்பொறுத்தவரையில் கூடுதலான நிலப்பரப்பை பெற்றிருக்கிறோம். கோட்டையை வெற்றிபெற்றதனால் இங்கு மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். பெரியளவில் இராணுவத்தை எதிர்த்து பெரிய தொகையளவில் அவர்களுடன் போரிடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்ப வளர்ச்சியின்போது பெரியளவில் இராணுவத்தை எதிர்க்கக்கூடிய நிலை இருக்கவில்லை.

ஆனையிறவு யுத்தத்தின் மூலம் மரபு ரீதியான ஒரு யுத்தத்தை அதாவது பெரியளவில் இராணுவத்தை தொடர்ச்சியாக நீண்டநாட்களில் நின்று தடுக்கக்கூடிய நிலையை வளர்த்திருக்கிறோம். இராணுவ ரீதியில் நாங்கள் வளர்ச்சி கண்டுள்ளோம்.

கே: போரினால் ஏற்பட்ட இழப்புகள் பற்றி?

ப: போராட்டத்தில் இழப்பைப் பார்த்தால் போரிட முடியாது. இழப்புக்கு அஞ்சி யுத்தம் செய்வதில் அர்த்தமில்லை. இழப்புகளை பொறுத்தவரையில் விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகஇருக்கின்றது. பொது மக்கள் மத்தியிலே இழப்புகளையிட்டு எம்மீது அனுதாபமும் அதேநேரம் நம்பிக்கையும் ஏற்படுகிறது. தங்களை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் ஏற்படுகின்றது.



கே: "ஆனையிறவுப் போர் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப; ஆனையிறவுப் போர்பற்றி நாங்கள் போரில் குதிப்பதற்கு முதல்நாள் காயப்படுகின்றவர்களுக்கு வைத்தியம் அளிப்பது தொடர்பான கலந்துரையாடலில் எங்களில் 300 பேர் உயிரிழப்பார்கள், 900 பேர் காயமடைவார்கள் என்று தெரிவித்து அதற்கு ஏற்ற மாதிரி ஒழுங்குகளை செய்யுமாறு தெரிவித்திருந்தேன். யுத்தத்திற்கு முதல்நாளே இவ்வளவு பேர் இறப்பார்கள் என்று தெரிவித்திருந்தேன்.

ஆனையிறவு இராணுவம் முகாமினுள் 800 இராணுவத்தினர் இருந்தால் முகாமைத் தாக்கும்போது எங்களில் 300 பேர் இறப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். இந்த எதிர்பார்ப்புடன் நாங்கள் இருக்கும்போது எங்களுக்கு எதிர்பாராதவிதத்தில் பெரியளவில் படையினர் தரையிறங்கினர். படை இறங்குமென்று எதிர்பார்த்தாலும் பெரியளவில் படைகளை குவித்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை ஆதரவு படையாக சிறுபடை இறங்கும். அதனை விரட்டியடித்துவிடலாம். பின்னர் முகாமை பிடித்துவிடலாம் என்று எதிர்பார்த்தோம்.

சிறிலங்கா அரசை பொறுத்தவரையில் இது ஒரு கௌரவப் பிரச்னை. பெரிய அளவில் படைகளை இறக்கினார்கள். அதனை நாம் எதிர்கொண்டு அதில் எங்கள் இழப்பு 240 பேர்வரைதான இருந்தது.

ஜூலை 23ம் திகதி வரை இறந்த போராளிகளின் தொகை 564. பின்பு ஆனையிறவு பகுதியில் நின்று போராடி வீரமரணம் அடைந்தவர்களும் உட்பட நாங்கள் எதிர்பார்த்தது 300. இந்த போரில் நாங்கள் உண்மையில் இதைவிட இழப்பு ஏற்படும் என்றுதான் எதிர்பார்த்தோம். அரசின் எறிகணை தாக்குதலும், ஆகாயத் தாக்குதலும் அதிகம். இந்த நிலையில் எதிர்பார்த்ததிலும் இழப்பு குறைவாகும். 43 நாள் போரில்தான் காயப்பட்டவர் இறந்தது எல்லாவற்றையும் சேர்த்து பார்த்தா— குறைவுதான்.

கே: சுவிஸ் அரசாங்கம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு முயற்சி செய்கிறது. இன்றைய சூழ்நிலையில் அப்படியான பேச்சுவார்த்தை வந்தால் கலந்துகொள்வீர்களா?

ப: நாங்கள் எப்பவுமோ நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை வரவேற்கிறோம். எப்பொழுதும் அதில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

கே: இந்திய-இலங்கை, தமிழ்நாடு அரசுகளால் உங்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிகைகைகள் போராட்டத்திற்கு பெரியதாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா?

ப: இத்தாக்கம் ஒரு தற்காலிகமானது. ஏனென்றால் எம்மீது குற்றச்சாட்டுகளை இந்திய அரசாங்கம் ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியவில்லை இந்த குற்றச்சாட்டுகள் ஒரு காலத்தில் நீங்கும் என்று கருதுகிறேன்.

கே: போர் சம்பந்தமாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சிபற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப: மக்கள் மத்தியில் எங்களுக்கு ஆதரவாக விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை நாங்கள் மறுக்கமுடியாது இந்த ஆனையிறவுப் போரிலே மக்கள் காட்டிய ஆதரவிலேயே கண்டுகொள்ள முடிந்தது ஆனால் அதேநேரம் உலகத்தில் எங்கேயுமே யுத்தம் என்றால் பலகஷ்டங்கள் உண்டு. அந்த கஷ்டங்களை மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே மக்கள் மததியில் ஒரு ஏக்கம் இருப்பது எங்களுக்கு தெரிகிறது. உதாரணமாக வாழ்க்கை நடத்துவதற்கு மக்கள் இன்று எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். விலைவாசி உயர்வுகள், பொருளாதாரத் தடைகள் மக்களை துன்பப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் அதையும் மீறி ஆனையிறவுப் போரில் மக்கள் காட்டிய ஆதரவை நினைக்கும்போது. சாதாரணமாக மக்கள் தந்த உணவுப் பொருளை பார்த்தாலே தெரியும் அதன் பணப் பெறுமதி எவ்வளவோ கூட. அப்படி மக்கள் பெரும் கஷ்டங்களுக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும் எங்களுக்கு உதவி செய்துள்ளார்கள் மக்களை பொறுத்தவரை போராட்டத்தை உணர்ந்துகொள்கிறார்கள். போராட்டத்திற்கு இதுதான் வழி என்பதையும் தெரிந்துகொள்கிறார்கள். ஆனால் மக்கள் மத்தியில் தாக்கம் இருப்பதையும் நாங்கள் மறுக்கமுடியாது. ஏனென்றால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். தனிப்பட்ட வாழ்க்கையை நடத்தக் கூடிய கஷ்டங்கள் இருக்கின்றது. அது யுத்தத்தின் விளைவுகள தான்.

கே: மக்கள் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று கேள்வி எழுப்புகிறார்கள் அதற்கு என்ன கூறுகிறீர்கள்?

ப: மக்கள் பெரிய அளவில் எம்முடன் அணிசேரவேண்டும். போராட்டத்தில் இழப்புகளை ஈடுசெய்ய வேண்டும் இந்த இரண்டின் மூலமே நாம் போராட்டத்தில் வெல்லமுடியும். அடுத்து என்ன நடக்கும் என்றதொரு நிலை மக்களிடம் இருக்கத்தான் செய்யும் நிச்சயமாக மக்களை பிரச்னைகளிலிருந்து ஓரளவுக்கு எம்மால் காப்பாற்ற முடியும். பெரியதொரு சக்தியை எதிர்க்கும் மனோநிலையை மக்கள் பெற வேண்டும். முற்றுமுழுதாக போராளிகளின் தலையில் எல்லாவற்றையும் சுமத்தக் கூடாது. எங்கள் கஷ்ட நஷ்டங்களில் மக்கள் பங்குபற்ற வேண்டும்.

கே: தென்னிலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல் நெருக்கடிகளை பொறுத்து உங்கள் அணுகுமுறை எப்படி இருக்கிறது?

ப: தறபோதைய நிலையில் ஒருமுடிவுக்கும் வர இயலாது பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும்.

கே: ஆனையிறவு போருக்கு பிறகு எத்தனை போராளிகள் புதிதாக இணைந்துள்ளார்கள்?

ப: நாங்கள் இழந்தபோராளிகளைவிட அதிகளவில்போராளிகள் எம்முடன் புதிதாக இணைந்துள்ளார்கள். இது ஒரு பெரிய வெற்றியாகும்.

கே: தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் குறித்த என்ன கூறுகிறீர்கள்?

ப; தமிழகத்தில் இருந்து வெளிவரும் பலபத்திரிகைகள் சஞ்சிகைகள் எமது போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதத்தில் ஒரு பொறுப்பற்றதனமாக செய்திகளையும். படங்களையும், கட்டுரைகளையும் பிரசுரித்து வருகின்றன. குறிப்பாக அவை வியாபார நோக்கத்தை மையமாக வைத்து குறிக்கோள் அற்றவிதத்தில் செய்திகளை வெளியிட்டு மக்களை திசைதிருப்ப முயலுகின்றன.

கே; கிட்டு பிரிட்டனிலிருந்து வெளியேற்றப்பட்டமை குறித்து என்ன கூறுகிறீர்கள்?

ப: பிரிட்டனின் அனுமதி பெற்றே கிட்டு வைத்தியத்திற்காக அங்கு தங்கியிருந்தார். அதன் பின்னர் இந்த வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது தவறானதே. அவர்மீது சுமத்தப்பட்டுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளிலும் ஆதாரம் எதுவும் இல்லை. அவர் கடந்த ஒரு வருடமாக அங்கு தங்கியிருந்திருக்கிறார் முதலில் 6 மாத விசாவும் பின்னர் 6 மாத விசாவும் வழங்கப்பட்ட பின் வைத்தியத்திற்காக சென்ற கிட்டுமீது இவ்வாறு வெளியேற்றியது தவறானதே. குற்றச்சாட்டு இருந்ததால் விசா நீடிக்காமல் அப்போதே வெளியேற்றியிருக்கலாம்.

கே: பிரிட்டன் போன்ற நாடுகளை விடுதலைப் புலிகளுக்கு எதிராக திருப்புவதில் இந்தியாவின் பின்னணி இருக்குமா?

ப: இலங்கையின் பிரச்னை தான் விடுதலைப் புலிகள் இந்தியாவின் பிரச்னை விடுதலைப் புலிகள் அல்ல. இந்தியா இதன் பின்னணியில் இருக்கும் என்பதில் நாம் உறுதியான முடிவுக்கு வரமுடியாது. இன்னொரு நாட்டில் போராடிக்கொண்டிருக்கும் போராளிகள் தமக்கு ஆபத்து என்றுகூறினால் அது இந்தியாவின் பாதுகாப்புத் துறை பலவீனமானது என்பதையே காட்டும்.

கே: இலங்கை அரசையும் விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்த ஐரோப்பிய நாடுகள் முயலுவதாக வரும் செய்திகள் குறித்து என்ன கூறுகிறீர்கள்?

ப: ஆரம்பத்திலிருந்தே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுத்தான் வருகின்றன. நோர்வே, சுவீடன் நாட்டு பிரதிநிதிகள் இதுகுறித்து எங்களுடன் பேசியுள்ளார்கள். பின்னர் தொடர்ந்து இந்தப்பேச்சுகள் நடைபெறவில்லை.

கே: மீண்டும் இந்தியா இலங்கைப பிரச்சனையில் தலையிடும் வாய்ப்பு உண்டா?

ப: நான் அப்படிக் கருதவில்லை. இந்தியாவில் ஒரு உறுதியான அரசு அமையவில்லை. மேலும் அவர்களுக்கு பெருமளவில் உள்நாட்டுப் பிரச்னைகளும் உள்ளது. இதனால் அவர்கள் இலங்கைப் பிரச்சனையில் தலையிடும் வாய்ப்புகள் குறைவு.

கே: தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கையை பாதிக்குமா?

ப: அதற்குரிய சாத்தியக் கூறுகள் உண்டு. அரசைத் தொடர்ந்து நடத்தமுடியாத சூழ்நிலையும்மக்கள் கிளர்ச்சியும் ஏற்படுமானால் இராணுவம் பெருமளவில் அப்பகுதிகளுக்கு அனுப்பவேண்டிய நிலை ஏற்படலாம். இதனால் இராணுவ நடவடிக்கையில் ஒரு மந்த நிலை தோன்றலாம்.

கே: இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியா வெளியேற்ற முயலுகிறதே?

ப: அகதிகள் பிரச்னையில் இந்திய அரசும் ஓரளவுக்குபொறுப்பேற்கவேண்டும். ஆரம்பத்தில் இந்தப் பிரச்னையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அகதிகளை அங்கு தங்கவைத்தும், இலங்கை மீது ஒரு அழுத்தத்தைக்கொடுக்கவேண்டுமென்ற நோக்கில் அகதிகள் பிரச்னையை இந்தியா பயன்படுத்தி வந்தது. ஆனால் தற்போது அந்தச்சூழ்நிலை தேவைப்படாத நிலையில் அகதிகளை வெளியேற்ற முயலுகிறார்கள்.

அகதிகள் ஒன்றை உணரவேண்டும் எந்தவொரு கஷ்ட நிலை வந்தாலும் சொந்த மண்ணிலே இருக்கவேண்டும். சொந்த மண்ணை விட்டு வெளியேறக்கூடாது அங்கு இவர்கள் படுகின்ற கஷ்டத்தை விட இங்கு எவ்வளவோ வசதிகளைப் பெறலாம். இந்தியா கொடுத்த அழுத்தத்தால் இந்த அகதிகள் பிரச்னை ஏற்பட்டது. இந்த நிலையில் அவர்களைப் பயன்படுத்திவிட்டுக் கைவிட நினைப்பது இம் மக்களுக்குச் செய்யும் துரோகத்தனமாகும்.

கே: இலங்கையிலிருந்து சென்ற மலையகத் தமிழர்களை இந்தியாவில் பதியும்படி கேட்கப்படுகிறதே?

ப; மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எவ்வளவோ துரோகங்களுக்கு ஊடாகவே வாழுகிறார்கள். இன்று மலையகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பிரச்னைகளுக்கு அவர்களுடைய தலைமைத்துவங்களே காரணமாகும், மலையகத் தலைமை என்று குறிப்பிடுகையில் பொதுவாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சாரும். (மா)

★ ஜனுதிபதிக்கு எதிரான

# மனு சபைக்கு வரட்டும் அப்போது பார்ப்போம்

**- ரணில் விக்கிரமசிங்க**

(கொழும்பு)

ஜனுதிபதி திரு பிரேமதாஸாவுக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனு குறித்து கடந்தவியாழக்கிழமை அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அளித்த பேட்டி வருமாறு:

கே: எத்தனை எம் பிக்கள் அந்த மனுவில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ப: தெரியாது. சபாநாயகர் அதனை அறிவிக்கவில்லை,

கே: அரச எம்.பிக்கள் கைச்சாத்திட்டுள்ளனரா?

ப: கைச்சாத்திட்டுள்ளதாக வெளியே பேசப்படுகிறது. ஆனுல் எங்களுக்குத்தெரியாது

கே: போதியளவு எம். பிக்கள் கைச்சாத்திடாமல் மனுவை சபாநாயகர் ஏற்பாரா?

ப: மனு வரட்டுமே. அதனை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும்.

கே: பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் மனு இடம் பெற்றுவிட்டதா?

ப; இன்னும் இல்லை.

கே: ஒழுங்குப பத்திரத்தில் இடம்பெற்ருல் விவாதத்துக்கு இடம் அளிப்பீர்களா?

ப: ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெற்ருல் அது பற்றி பரிசிலிப்போம்.

கே: மனுவில் கைச்சாத்திட்டீர்களா?

ப: நான் கைச்சாத்திட்டிருந்தால் மந்திரி சபையில் ஜனுதிபதியை ஆதரிப்பேனு?

கே: ஆளுங்கட்சிஎம். பிக்களிடம் விசாரித்தீர்களா?

ப: 30, 40 பேரிடம விசாரித்தேன். அவர்கள் யாரும் கைச்சாத்திடவில்லை என்ருர்கள்.

கே: காமினி திசாநாயக்காவை விசாரித்தீர்களா?

ப: அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

கே: அரசுக்குள் நெருக்கடி ஏற்பட்டுள்ளதா?

ப: பல தரப்பட்ட நெருக்கடிகளைச் சந்தித்துவிட்டோம். மேல்மாகாண முதலமைச்சரை விசாரித்தேன். அவர் ஜனுதிபதியை ஆதரிக்கிருர். ஜாதிக சேவக சங்கமயவும் ஆதரிக்கிறது.

கே; இவர்களை எல்லாம் ஏன் கேட்டீர்கள்?

ப: கட்சிக்குள் நெருக்கடியா என்று கேட்டீர்களே? கட்சியில் உள்ள பலரிடம் இது பற்றி விசாரித்துவிட்டேன்.

கே: அரச எம். பிக்கள் கைச்சாத்திட்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

ப; யார் கைச்சாத்திட்டாலும் மனு சபைக்கு வரட்டும். வாக்கெடுப்பும் நடக்கட்டும். அப்போது யார் ஆதரவு, யார் எதிர்ப்பு என்பது தெரியும். படிப்படியாக விவகாரத்தைக் கையாள்வோமே.

கே: அரச எம். பிக்களின் நிலையை முழுமையாக அறிவீர்களா?

ப; பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் அறியலாம். திங்கட்கிழமை கட்சிக் குழுக்கூட்டம் நடக்கும்.

கே: பாராளுமன்றத்தில் ஜனுதிபதி மீது நம்பிக்கை தெரிவிக்க நேரிடுமா?

ப: ஜனுதிபதி மக்களால் தெரிவானவர் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அடுத்த தேர்தலில் மக்கள் விரும்பினுல் ஜனுதிபதியை மாற்றலாம். அதற்கு முன் ஜனுதிபதியை அகற்ற உயர் நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக் காணவேண்டும். வேறு விதங்களில் ஜனுதிபதியை அகற்ற முடியாது.

கே: எல். ரி. ரி. ஈ. அமைச்சர் தொண்டமானை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது பற்றி...

ப: அதுபற்றி மந்திரிசபை ஆராயவில்லை எல். ரி ரி. யிடம்தான் அதுபற்றிக் கேட்க வேண்டும்,

## மனுவில் கையெழுத்திட்டவர்கள் யார் என்பதனை அறிய பிரதமர் பெரும் முயற்சி

(கொழும்பு)

ஜனுதிபதிக்கு எதிரான மனுவில் கையெழுத்திட்ட எம். பிக்கள், அமைச்சர்கள் யார் என்பதை அறியும் முயற்சியில் பிரதமர் திரு. விஜயதுங்க ஈடுபட்டுள்ளார்.

இவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆராயப்பட்டு வருவதாக ஐ. தே. க. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை திரு. பிரேமதாஸாவிற்கு ஆதரவாக கட்சிக்குள் கையெழுத்துவேட்டை ஒன்றில் ஐ. தே. க. பிரமுகர்கள் ஈடுபட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இனந்தெரியாத சடலம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியிலுள்ள மயானத்துக்கு அருகாமையில்இனந்தெரியாத சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் காணப்பட்டது.

கழுத்தில் சிறிய கயிற்ருல் இறுகக் கட்டப்பட்டநிலையில் அடிகாயங்களுடன் மேற்படி சடலம் காணப்பட்டது நீல நிறக் கோடிட்ட சாரமும், வெள்ளைநிறப் புள்ளிச்சேட்டும் அணிந்துள்ளதுடன் சடலத்திற்கு அருகில் சைக்கிளொன்றும்காணப்பட்டது. (155)

## இராசி பலன்

01 · 09 · 1991

ஞாயிற்றுக்கிழமை

தமிழுக்கு ஆவணி 16

ஸப்தமி மு. ப. 10-48 வரை கார்த்திகை பி.ப. 1-58 வரை இராகுகாலம் மாலை 4-55 முதல் 6-05 வரை, சுபநேரம் காலை 9-05 முதல் 10-35 வரை ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி.

மேடம்: தொழில் சிறப்பு, உறவினர் உதவி, குடும்ப மகிழ்ச்சி.

இடபம்: தாழ்ந்த நிலை, வாக்குகலகம், வைத்திய செலவு.

மிதுனம்; வெகுமதி, தாயார் உடலநலம் பாதிப்பு, குடும்ப சுகம்.

கடகம்; சுபகாரியம் புதிய உறவு. வெற்றிவாய்ப்பு.

சிங்கம்: தொழில் மந்தம், பணமுடை அலைச்சல் மிகுதி.

கன்னி: மோதிக்கொள்ளல், விதண்டாவாதம் குழப்பம்.

துலாம்; ஏக்கம், தொழில் லாபம், அதிகாரசிறப்பு.

விருச்சிகம்: விரும்பிய மாற்றம், பொதுப்பணி, தானதர்மம்.

தனுசு; பதட்டம், குறை கேட்டல் அவமதிப்பு.

மகரம்: மயக்க நிலை, தொழில்பிணக்கு, குடும்ப பிரிவு.

கும்பம்: காரியசித்தி, மகிழ்ச்சியான சம்பவம், புகழ்.

மீனம்; கீழ்படிதல், தவருன போக்கு, உடல் உபாதை.

- ஜோஸ்யர்

# மேலும் அமைச்சர்கள் ராஜினுமா செய்யலாம்

(புதுடில்லி)

இலங்கை அமைச்சரவையிலிருந்து மேலும் பல அமைச்சர்கள் விரைவில் ராஜினுமா செய்யவுள்ளதாக இந்தியாவின் பிரபல நாளேடான' இந்துஸ்தான் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

இதுவரை திரு.லலித் அத்துலத்முதலி, திரு ஜி. எம். பிறேமச்சந்திரா, ராஜாங்க அமைச்சர் திரு. லக்ஷ்மன் செனிவிரத்ன ஆகியோர் ராஜினுமா செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஆதரவாக மேலும் பல அமைச்சர்கள் விரைவில் பதவி விலகுவார்கள் என்றும் 'இந்துஸ்தான் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது. (சி)

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விக்டர் [குமாரரட்ணம் சுபாஸ்கரன் - மட்டக்களப்பு], சிறிதரன் [சூசைப்பிள்ளை நிக்ஸன், மூதூர்] ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கததை தெரிவித்துள்ளனர்.

★

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவடி ஓடையில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் வீரவேங்கை றஞ்சிதர் (இளையதம்பி கந்தசாமி வாழைச்சேனை) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர் [வி]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கப் பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு யாழ். ப நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது இக் கலந்துரையாடலுக்குச் சங்கப் பொதுமுகாமையாளர்களைத் தவருது சமுகம் தரும்படி யாழ். மாவட்ட கூட்டுறவுப்பகுதியினர் கேட்டுள்ளனர்.

## மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் ஏற்பட்ட எதிர்பாராதவிபத்து ஒன்றில் மரணமான அரியாலையைச்சேர்ந்த வீரவேங்கை அஜந்தன் [மதியாபரணம் தவகாந்தன்] என்பவரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

காலை 11-00மணி முதல் 2-00 மணிவரை புகழுடல் வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றபின் மாவீரரின் புகழுடல் கோப்பாய்மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புதைகுழியில் விதைக்கப்பட்டது.

### ஜனுதிபதியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானது. அரசியல் சாசனத்துக்கு முரணுனது என்று தெரிவித்தார்கள்.

கொழும்பில் மேற்படி தலைவர்கள் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அரசுசபையில் பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்டது என்பதைத்தான் ஜனுதிபதியின் இச்செயல் காட்டுகின்றது என்றும் கூறிஞர்கள்.

இதேநேரம் ஈ பி. ஆர். எல், எவ். எம். பி. திரு. பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்: "இலங்கையில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையை பிரேமதாசா கலைத்துவிட்ட நடவடிக்கைக்காக அவர்மீது அரசியல் குற்றச்சாட்டு சுமத்தும் பிரேரணையில் எமது கட்சியும் சேர்ந்து கொள்கிறது என்று தெரிவித்தார். [வி]

### பிரேமா பதவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரம்பேச திரு. பிரேமதாசா முயலக்கூடுமென்றும் இதனை முறியடிக்கும் ஒரு முயற்சியாக மக்களை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்த எதிர்க்கட்சிகள் முனையலாமெனவும் இச்செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வெளிநாடுகளின் கவனம் இலங்கை பக்கம் திரும்பியுள்ளதும் குறிப்பிடத்தக்கது [சி]

### ஆளும் கட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வான பாராளுமன்ற உறுப்பினர்கள். அமைச்சர்கள் மறுப்பு தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

தென்னிலங்கையின் தற்போதைய அரசியல்நெருக்கடிபற்றி கருத்துக் கூறவோ விவாதிக்கவோ இவர்கள் மறுத்துவிட்டனராம்.

### யாருடையது?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் முட்டாசுக்கடைச் சந்திக்கு அருகில் நேற்றுமாலை சிறுவர் பாடசாலை ஆசிரியை பி. லோகேஸ்வரி என்பவரது பயிற்சி புத்தகமும் சிறுதொகை பணமும் பெறுமதி வாய்ந்த பொருளொன்றும் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

### எதிரான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இது அவரது எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது (சி)

### சபாநாயகரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணையில் கையொப்பம் இட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொலைபேசிகள் நுண்ணிய கருவிகள் மூலம் ஒற்று கேட்கப்படுவதாகவும் சபாநாயகரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. திரு. காமினி திசநாயக்காவினதும் பதவி விலகிய 3 அமைச்சர்களதும் தொலைபேசியே ஒற்று கேட்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனுதிபதிக்கு ஆதரவான போஸ்டர்கள் கொழும்பில் சகல இடங்களிலும் ஒட்டப்பட்டிருக்கிறது. சபாநாயகர் எம் எச். முகமதுவின் காரும் வழியில் 2 வாகனங்களில்வந்த கோஷ்டியினரால் தடுத்து நிறுத்தப்பட்டு கொலைசெய்ய முயன்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. லலித் அத்துலத்முதலி, பிரேமசந்திரா, லக்ஷ்மன் செனிவிரததன ஆகியோரின் பாதுகாப்புகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (153)

### தென்பகுதியில

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு முன் எச்சரிக்கையின்றி நீக்கப்பட்டதாகவும், தாமும் ஜனுதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டில் கைச்சாத்திட்டஎம் பிக்களும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், சீருடை அணிந்த நான்கு குழுக்களைக் கொண்ட குண்டர் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ரூபவாஹினி, இலங்கை வாஞெலி ஆகியவை தமது அமைச்சர் பதவி ராஜினுமா பற்றிய செய்தியை இரட்டடிப்புச் செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனுதிபதிக்கு எதிராராகத் தற்போது ஐ. தே. கட்சியைச் சேர்ந்த 47 எம். பிக்கள் கைச்சாத்திட்டுள்ளதாகவும்மேலும் மூன்று அமைச்சர்கள் பதவி விலகுவார்கள் என்றும் பல எம். பிக்கள் தங்களுக்கு ஆதரவு வழங்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

பி. பி. ஸி. வாஞெலிக்கு அளித்த இந்த பேட்டிகூட ஒட்டுக்கேட்கப்படுகிறது என்றும் அவர் கூறிஞர். (153)

### கொழும்பு நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நெருக்கடி அதிகரித்துவருவதையிட்டு தென்பகுதியில் படைகள்உஷார்படுத்தப்பட்டு வருவதாகவும் எங்கும் பதற்றநிலை தோன்றியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [மா]

### ஜனுதிபதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது ஜனுதிபதிக்கு எதிராக சமர்ப்பிககப்பட்ட மனுவை பாதிக்காதெனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

### இலங்கை அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேட்டபோதே அந்த அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்

இதுகுறித்து மேலதிக கருத்தெதனையும் கூற அந்த அதிகாரி மறுத்ததுடன் நிலைமைகளை அவதானிக்கிருேம் என மாத்திரமே கூறிஞர். (சி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81,